**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 49/2026**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 8 | | Examined as : | PW 2 |
| Name | : குணசேகரன் | Defence | : |
| Father Name | : வரகுணபாண்டியன் | Court | : |
| Village | : | Taluk | : |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர், செம்பனார்கோவில் | | : |
| Age | : /2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 05.08.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை:—

நான் தற்போது செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் உதவி ஆய்வாளர் சந்தோஷ்குமார் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானமாகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.09.2025ஆம் தேதி உதவி ஆய்வாளர் சந்தோஷ்குமார் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது மணிவண்ணன் த/பெ. அகோரம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்றுள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த புகார் மனுவின் அடிப்படையில் காவல் நிலை குற்ற எண் 406/2025 BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை பதிவுசெய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.**

**2.** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முபாரக் மற்றும் மன்சூர் அலி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி குற்ற சம்பவம் புரிந்தது உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரியை தேடியபோது எதிரி கடந்த 14.09.2025 அன்று மதியம் 12.00 மணியளவில் மருதம்பள்ளம் எதிரியின் வீட்டில் வைத்து எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

3. இவ்வழக்கில் காயம்பட்ட அசா1விற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பாலமுருகன் அவர்களை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை பதிந்து அவர் கொடுத்த விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழினையும் பெற்றார். அந்த **விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ6ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கின் எதிரியின் மீதான விசாரணையை முடித்து கடந்த 30.01.2026 அன்று BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3) ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சொன்ன தேதியில் சொன்ன் நேரத்தில் புகார் மனு பெறவில்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு செல்லாமலும் சம்பவ சாட்சிகளை விசாரிக்காமலும் எதிரியின் மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**